ஈரோடு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் நடவடிக்கைகள்
பிறப்பிப்பவர்: திரு.தா.முஹம்மது குதுரத்துல்லா,

ந.க.9495/2021/அ5 நாள்: 02.07.2024.

பொருள்: பொதுப்பணிகள் - ஈரோடு மாவட்டம் - அந்தியூர் வட்டம் - பிரம்மதேசம் கிராம உதவியாளர் கே. செல்வராஜ் என்பவர் 06.03.2020-ல் காலமானது - மகன் கார்த்திகேயன் (திரு) எஸ். என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டது - பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை:

1. அரசாணை (நிலை) எண். 120 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்: 26.06.1995.
2. அரசாணை எண். 165, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யு.2) துறை, நாள்: 30.08.2010.
3. அரசாணை (நிலை) எண். 78 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ-1)துறை, நாள்: 21.04.2017.
4. சென்னை முதன்மைச் செயலர் / வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களின் கடித எண். பணி 4(1)02-44/1/2022 நாள்:05.07.2022.
5. கோபிசெட்டிபாளையம் வருவாய் கோட்ட அலுவலரின் கடித ந.க.10930/2022/ஆ1 நாள்:29.11.2022.
6. ஈரோடு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் செயல்முறைகள் ந.க.9495/2021/அ5 நாள்.29.07.2022.
7. ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந.க.9495/2021/அ5 நாள்:06.12.2022.
8. அரசாணை (நிலை) எண்.33 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை (க்யூ-1) துறை நாள்:08.03.2023.
9. அரசுக் கடித எண்.5532/ஜி2/2023, மனிதவள மேலாண்மைத் துறை நாள்:20.09.2023.
10. அரசு துணைச் செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அவர்களின் கடித (1டி) எண்.850 நாள்:08.12.2023.
11. அரசு துணைச் செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அவர்களின் கடித (1டி) எண்.900 நாள்:26.12.2023.
12. அரசு துணைச் செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அவர்களின் கடித (1டி) எண்.13 நாள்:18.01.2024.
13. சென்னை கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களின் கடித எண். ஆ.கு.3/3744590/2022 நாள்:30.05.2024.

ஜஜஜஜஜஜ

**ஆணை:**

ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், பிரம்மதேசம் கிராம உதவியாளராக பணிபுரிந்து பணியிடையே 06.03.2020-ல் காலமான செல்வராஜ் என்பவரது மகன் திரு.எஸ்.கார்த்திகேயன் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணியிடம் வழங்க கோரி மனு செய்ததன் பேரில் தனியருக்கு பார்வை 06-ல் காணும் செயல்முறை ஆணையின்படி இளநிலை

வருவாய் ஆய்வாளராக கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டு 01.08.2022 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார். பார்வை 8-ல் காணும் அரசாணை (நிலை) எண்.33 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை (க்யூ-1) துறை நாள்:08.03.2023 மற்றும் அரசுக் கடித எண்.5532/ஜி2/2023 நாள்:20.09.2023-ல் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை பணிநியமன அலுவலரே பணிவரன்முறை செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்காணும் அரசாணை மற்றும் அரசு கடிதங்களின் பேரிலும், தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகள் விதி 23(a)(i)-ன்படியும், தனியர் திரு.எஸ்.கார்த்திகேயன் என்பவரது பணியினை பணியேற்ற நாளான 01.08.2022 முற்பகல் இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் கீழே அவருக்கெதிரே கலம்-04-ல் குறிப்பிடப்பட்டுள்ள நாளில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பெயர் மற்றும் பணிபுரியும் அலுவலகம் | இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | திரு.எஸ்.கார்த்திகேயன்,<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>பவானி. | 01.08.2022 முற்பகல் | 01.08.2022 முற்பகல் |

மேலும், தனியருக்கு முன் தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், ஆண்டு ஊதிய உயர்வு, ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் விதிகளின்படி அவற்றைப் பெறத் தனியர் தகுதியுடையவராகிறார்.

தனியரது பணியினை பணிவரன்முறை செய்யப்பட்டதற்கான பதிவினை பணிப்பதிவேட்டில் பதிவுசெய்து அதன் விபரத்தினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு பவானி வருவாய் வட்டாட்சியர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும், பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர்ச்சியான மூன்று ஆண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவம் நிறைவு செய்யப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்./-தா.முஹம்மது குதுரத்துல்லா,
மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (பொது),
ஈரோடு.

//உண்மைநகல்/உத்தரவுப்படி//

அலுவலக மேலாளர் (பொது)

பெறுநர்:-
திரு.எஸ்.கார்த்திகேயன்,
இளநிலை வருவாய் ஆய்வாளர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
பவானி.

நகல் : வருவாய் வட்டாட்சியர், பவானி.

நகல்: கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

நகல் : "அ5" - இருப்புக் கோப்பிற்கு.